www.shaivam.org

திருச்சிற்றம்பலம்

கற்றவர்கள் உண்ணும் கனியே போற் றி
 கழலடைந்தார் செல்லும் கதியே போற் றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற் றி
 அல்லலறுத்து அடியேனை ஆண்டாய் போற் றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற் றி
 வானவர்கள் போற்றும் மருந்தே போற் றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற் றி
 திருமூலட்டானனே போற் றி போற் றி

வங்கமலி கடல்நஞ்சம் உண்டாய் போற் றி
 மதயானை ஈருரிவை போர்த்தாய் போற் றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற் றி
 கொல்புலித்தோல் ஆடைக் குழகா போற் றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற் றி
 ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற் றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற் றி
 திருமூலட்டானனே போற் றி போற் றி

மலையான் மடந்தை மணாளா போற் றி
   மழவிடையாய் நின்பாதம் போற் றி போற் றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற் றி
   நெற் றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற் றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற் றி
   ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற் றி
சிலையாலன்று எயிலெரித்த சிவனே போற் றி
   திருமூலட்டானனே போற் றி போற் றி

பொன்னியலும் மேனியனே போற் றி போற் றி
   பூதப் படையுடையாய் போற் றி போற் றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற் றி
   மறியேந்து (1) கையானே போற் றி போற் றி
உன்னுமவர்க்கு உண்மையனே போற் றி போற் றி
   உலகுக்கு ஒருவனே போற் றி போற் றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற் றி போற் றி
   திருமூலட்டானனே போற் றி போற் றி

நஞ்சுடைய கண்டனே போற் றி போற் றி
   நற்றவனே நின்பாதம் போற் றி போற் றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற் றி
   வெண்மதியங் கண்ணி விகிர்தா போற் றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற் றி
   தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற் றி
செஞ்சடையாய் நின்பாதம் போற் றி போற் றி

திருமூலட்டானனே போற் றி போற் றி

சங்கரனே நின்பாதம் போற் றி போற் றி
சதாசிவனே நின்பாதம் போற் றி போற் றி
பொங்கரவா நின்பாதம் போற் றி போற் றி
புண்ணியனே நின்பாதம் போற் றி போற் றி
அங்கமலத்து அயனோடு மாலும் காணா
அனலுருவா நின்பாதம் போற் றி போற் றி
செங்கமலத் திருப்பாதம் போற் றி போற் றி
திருமூலட்டானனே போற் றி போற் றி

வம்புலவு கொன்றைச் சடையாய் போற் றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற் றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற் றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற் றி
நம்புமவர்க்கு அரும்பொருளே போற் றி போற் றி
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற் றி
செம்பொனே மரகதமே மணியே போற் றி
திருமூலட்டானனே போற் றி போற் றி

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற் றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற் றி
வள்ளலே போற் றி மணாளா போற் றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற் றி
வெள்ளை ஏறேறும் விகிர்தா போற் றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற் றி

தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற் றி
திருமூலட்டானனே போற் றி போற் றி

பூவார்ந்த சென்னிப் புனிதா போற் றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற் றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற் றி
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற் றி
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற் றி
சங்கொத்த நீற்றெம் சதுரா போற் றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற் றி போற் றி
திருமூலட்டானனே போற் றி போற் றி

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற் றி
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற் றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற் றி
காதலிப்பார்க்காற்ற எளியாய் போற் றி
அருமந்த தேவர்க்கு அரசே போற் றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளும்
சிரம் நெரித்த சேவடியாய் போற் றி போற் றி
திருமூலட்டானனே போற் றி போற் றி

திருசிற்றம்பலம்

(1) மறியேறு

www.shaivam.org